குழந்தைகளுக்கு வேதாகமம்
வழங்குபவர்

# கெட்ட குமாரன்



எழுதியவர்: Edward Hughes
சித்தரிப்பவர்: Lazarus
மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj
தழுவியவர்: Ruth Klassen; Sarah S.

**கதைகள்** 60 **ல்** 45

**www.M1914.org**

***Bible for Children,*** *PO Box 3, Winnipeg, MB R3C 2G1 Canada*

உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

Tamil



தேவனுடைய மன்னிப்பை பற்றிச் சொல்ல இயேசு ஆவலாயிருந்தார். ஆனால் இயேசு பாவிகளுடன் சிநேகிதரராயிருக்கிறார் என்று யூதத் தலைவர்கள் புகார் தெரிவித்தனர். ஆகையால் இயேசு பாவிகள் தங்களுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்படும்போது மிகவும் சந்தோஷமடைகிறார் என்று விளக்க மூன்று கதைகளைச் சொன்னார்.



நூறு ஆடுகளை உடைய மனிதனைக் குறித்து முதல் கதை.



ஒரு ஆடு காணாமற்போயிற்று.


உடனே தொன்னிற்றொன்பது ஆடுகளை விட்டுவிட்டு தொலைந்து
போன ஒரு ஆடைத் தேடிச் சென்றான்.
3
அந்த மேய்ப்பன் ஆட்டைக் கண்டுபிடிக்கும் வரை தேடித்தேடி அலைந்தான். அந்த ஆட்டை தன் தோளில் போட்டுக்கொண்டு சந்தோஷமாக வீட்டிற்கு சுமந்து சென்றான். "என்னோடு சந்தோஷப்படுங்கள்,
காணாமற்போன என் ஆட்டை கண்டுபிடித்தேன்," என்று தன் நண்பர்களிடம் கூறினான்.
4
மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷமுண்டாயிருக்கும் என்று இயேசு விளக்கினார். மனந்திரும்புவது என்றால் நம்முடைய பாவங்களுக்காக துக்கப்படுவதாகும் - அதைவிட்டு விலகிவிட துக்கப்பட வேண்டும்!
5
இயேசுவின் அடுத்த கதை. பத்து வெள்ளிக்காசையுடைய ஒரு பெண்ணைப் பற்றியது, ஒருவேளை அது அவளுடைய வாழ்நாள் சேமிப்பாகயிருக்கலாம். ஒரு பரிதாபமான காரியம் நடந்தது. அவள் ஒரு காசை துலைத்துவிட்டாள்.
6
பெருக்கு! பெருக்கு! பெருக்கு! அந்தப் பெண் எல்லா இடங்களிலும் தேடினாள்.
7
இறுதியாக அவள் அந்தக் காசை கண்டுபிடித்தாள். அவள் மிகுந்த சந்தோஷம் அடைந்தாள். அவள் என்ன செய்தாள் என்று யூகிக்க முடியுமா? ஆமாம், அவள் தன்னுடைய சிநேகிதர் எல்லாரிடத்திலும் சொன்னாள்!
8



திரும்பவும்
இயேசு சொன்னார்,
"மனந்திரும்புகிற
ஒரு பாவியினிமித்தம்
தேவதூதர் சமுகத்திலே
சந்தோஷம்
உண்டாகிறது."

9

இயேசு சொன்ன மூன்றாவது
கதைதான் துக்ககரமானது.
தன்னுடைய தந்தையின்
வீட்டை விட்டுச்சென்ற
ஒரு பையனின்
கதை.



10

தூர தேசத்திலே முட்டாள்தனமாக தன்னுடைய பணத்தை அந்தப் பையன் செலவு செய்தான். இப்போது அவன் என்ன செய்வான்? மிகவும் மோசமான, ஒரு பஞ்சம் ஏற்பட்டது. பசியினாலே அந்தப் பையன் சாகக்கிடந்தான்.



11

பசியை தாங்க முடியாத வேளையிலே, பன்றிக்கு தீவனம் கொடுக்கும் வேலை அவனுக்கு கிடைத்தது. ஆனால் யாரும் உணவு கொடுக்கவில்லை. பன்றியின் தீவனத்தை சந்தோஷமாக சாப்பிட அவன் நினைத்தான்.



12

ஒருவேளை அவன் சாப்பிட்டிருக்கக் கூடும்! கடைசியாக அந்தப் பையனுக்கு தெளிவு வந்தது. "என்னுடைய வீட்டிலோ, வேலைக்காரர்கள் நன்றாக சாப்பிடுகிறார்கள்," என்று யோசித்தான்.



13

"நான் என் வீட்டிற்குப்
போய் என்னுடைய
தகப்பனிடம் பாவத்திற்கு
மன்னிப்பு கேட்பேன். நான்
அவருடைய குமாரனாக
இருக்க தகுதியில்லை.
ஒருவேளை தன்னுடைய
வேலைக்காரனாக என்னை
கூலிக்கு அமர்த்துவார்."



14













கெட்ட குமாரன்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

லூக்கா 15

"தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது." சங்கீதம் 119:130

நாம் தவறுதல்களை செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அதை அவர் பாவம் என்று அழைக்கிறார்.  பாவத்திற்கு தண்டனை மரணமாகும்.

தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பி, நம்முடைய தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டு, நமக்காக சிலுவையில் மரணமடையச் செய்தார்.  இயேசு உயிரோடு வந்து, திரும்பவும் பரலோகத்திற்கு சென்றார்.  இப்போது தேவனாலே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும்.

உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்ப விரும்பினால், இந்த வாக்கியங்களை தேவனிடம் சொல்லுங்கள்: பிரியமுள்ள தேவனே இயேசுவே என்னுடைய வாழ்க்கைக்குள் வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதன் மூலம் நான் புதிய வாழ்வை இன்று பெற்று, உம்மோடு எப்போதும் இருக்க உதவி செய்யும்.  நான் உம்முடைய பிள்ளையாக வாழ உதவி செய்யும்.  ஆமென்.
யோவான் 3:16

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து, தேவனுடன் பேசவும்.